## சிரிப்பு -1

**சோமு**: நம்ம பையன் நிச்சயமா பெரியவனாய்ட்டான்!

**பானு**: அத எப்படி சொல்றீங்க?

**சோமு**: "அப்பா, எனக்கு ஒரு phone வேண்டும்", என்று கேட்டான்

**பானு**: சரி

**சோமு**: இந்தாப்பா, என்னோட phone ஐ நான் அதிகமாக உபயோகப் படுத்துறது இல்ல, நீயாவது உபயோகப் படுத்திக்கோ

… … … …

## சிரிப்பு -2

**முருகன்**: மணி என்ன சாப்பாட்டு பையெல்லாம் எடுத்துகிட்டு எங்க கிளம்பிட்டே? மணி நாலரை தான ஆவுது! முதலாளி பார்த்தா என்ன நினைப்பார்?

**மணி**: முருகா! நான் காலைல வர்ற போது இங்க இருந்தியா இல்லையா?

**முருகன்**: நான் தான் உனக்கு முன்னாடியே 8 மணிக்கே சரியா வந்து விட்டேனே!, நீ தான் மெதுவா எட்டரை மணிக்கு அரை மணி late-ஆ வந்தே.

**மணி**: முருகா! சரியா கண்டு பிடித்து விட்டாய்! காலைல 1/2 மணி நேரம் மெதுவா வந்தன்ல்ல, அதுக்காகத் தான் சாயங்காலம் 1/2 மணி நேரம் முன்னாடியே கிளம்பிட்டேன்!

… … … …

## சிரிப்பு -3

**சிவம் மாமா**: கந்தா! வாப்பா! நீ எப்படி இருக்கே?

**கந்தன்**: மாமா! நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?

**சிவம் மாமா**: நான் நல்லா இருக்கேன். அது சரி நீ எங்கேயோ வெளியூர் போனதாகக் கேள்விப் பட்டேனே?

**கந்தன்**: ஆமாம் மாமா! நான் வெளியூருல்ல **வெளிநாடே** போய்ட்டு வந்திருக்கிறேன்.

… … … …